[1981 ஏப்ரல் 28

தேசீய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம்.

* குறுகிய கால வினா எண் 12—திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசீய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தில் மத்திய அரசு கொடுத்து வந்த அரிசியை நிறுத்தி விடுவதாக அறிவித்திருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், மாநில அரசு என்ன மாற்றுத் திட்டத்தை கையாள இருக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) போதிய அளவு உபரி அரிசி இல்லாததால் மத்திய அரசு அரிசி வழங்கவில்லை. ஆனால் அரிசி வழங்கப்பட மாட்டாது என்று மத்திய அரசு திட்டவட்டமாகத் தெரிவிக்கவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. மி. வின்சென்ட்: தலைவர் அவர்களே, தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு மாநில அரசுக்கு மத்திய அரசு எவ்வளவு அரிசி ஒதுக்கியிருக்கிறது? இந்த ஆண்டிலே மத்திய அரசு மாநில அரசுக்கு எவ்வளவு அரிசி தந்துள்ளது? தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்திற்காக தமிழ்நாட்டிற்கு மைய அரசு எவ்வளவு நிதி ஒதுக்கியிருக்கிறது? அது சென்ற ஆண்டைவிட அதிகமா அல்லது குறைவா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நாம் ஒரு லட்சம் டன் தேவை என்று மைய அரசுக்கு எடுத்துச் சொல்லி இருக்கிறோம். ஆனால் அதற்கு முன்னோடியாக மத்திய அரசு நடப்பு ஆண்டில் முதல் 6 மாதங்களுக்கு 7 கோடியே 40 லட்சம் மானியம் வழங்கப் படும் என்று அறிவித்துள்ளார்கள். ஆகவே அரிசி இல்லாத காரணத்தால் பணமாகக் கொடுக்கப்படும் என்பதை அறிவித்திருக்கிறார்கள். வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு இந்த ஆண்டிலே 10 கோடி ரூபாய் என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது.

திரு. பாபு ஜனார்த்தனன்: தலைவர் அவர்களே, வறட்சிப் பணிகள் மாநில முழுவதும் நடந்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே வறட்சிப் பணிகளுக்காகக் கொடுக்கப்படுகிற அரிசி திடீரென்று நிறுத்தப்பட்டால் வறட்சிப் பணிகள் அதனால் பாதிக்கப்படும். ஆகவே வறட்சிப் பகுதியிலே உள்ள மக்களுக்கு அரிசி தாராளமாகக் கிடைக்க ஆவன செய்யப்படுமா ?

1981 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, வறட்சியை மையமாகக் கொண்டு இந்தத் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று இந்த மாநில அரசு செயல்பட்டுக் கொண்டு வருகிறது. ஆனாலும் 1981-82-ல் இந்தத் திட்டத்தை முழுத் திட்டமாக மைய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. முதலில் இது ஒரு சென்ட்ரல் செக்டார் ஸ்கீம் என்ற அளவிலே முழு மானியமும் மைய அரசாலே கொடுக்கப்பட்டது. இப்போது இந்த ஆண்டிலே பாதிதான் கொடுப்பதாக அறிவித்துள்ளார்கள்.

திரு. கோவைத்தம்பி: தலைவர் அவர்களே, மைய அரசு ஒருகால் இந்தத் திட்டத்திற்கு உதவ முன்வராவிட்டால் மாநில அரசு இதை முக்கியத் திட்டமாகக் கருதி வேண்டிய அரிசி, முதலீடு ஆகியவற்றை ஒதுக்கி, வேலைவாய்ப்பை தீவிரப்படுத்தத் திட்டம் தீட்டியுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல் மைய அரசு உதவவில்லை என்று இதுவரையிலும் சொல்லவில்லை. முதலிலே "இட் இஸ் எ சென்ட்ரல் செக்டார் ஸ்கீம்" என்று முழுத் திட்டமாக மைய அரசு கருதி வந்தது. இந்த ஆண்டிலிருந்து சென்ட்ரலி ஸ்பான்சர்டு ஸ்கீம் என்ற அளவிலே பாதி மானியம் என்ற அளவிலே தான் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தினுடைய முக்கியத்துவத்தை எல்லாம் மைய அரசுக்கு எடுத்துச் சொல்லி நமக்கு அரிசி வேண்டும் என்று நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் இந்தத் திட்டத்திற்கு முழுமையாக மைய அரசு உதவி செய்துவிட்டு இப்போது அரிசியில்லை என்று சொல்வதன் நோக்கம் என்ன? ஏற்கெனவே என்.ஆர்.டி.பி. திட்டத்தின் மூலமாகத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக பல கிராமங்களிலே வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடந்து கொண்டு இருக்கின்றன. இப்போது அரிசியில்லாத காரணத்தினால் அந்த வேலைகள் இடையிலே நிறுத்தப்படும். இதற்காக அமைச்சர் அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மைய அரசிடத்திலே போதிய அளவுக்கு உபரி அரிசி இல்லாத காரணத்தினாலே அரிசி கொடுக்க முடியவில்லை என்ற எண்ணத்தை வெளியிட்டு இருக்கிறார்கள். ஆனால் கையிருப்பிலே இருந்தால் நமக்குக் கொடுக்க வேண்டுமென்று நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனாலும் முதல் 6 மாதங்களுக்கு 7 கோடியே 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள்; அடுத்த ஆறு மாதங்களுக்கும் 7 கோடியே 40 இலட்சம் ரூபாய் அவர்கள் ஒதுக்குவார்கள்.